# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் (விசேட ஏற்பாடுகள்)

**தெற்காசிய தொழினுட்பவியல் மற்றும் மருத்துவ நிறுவகத்திடம் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களை 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு உள்ளீர்த்தல் தொடர்பான தேசியக் கொள்கையை விதிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் அவர்களால்*
*2018, யூன் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, மே மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 252 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் (விசேட ஏற்பாடுகள்)

*ச. வ.- ஒ. 27/2018*

**தெற்காசிய தொழினுட்பவியல் மற்றும் மருத்துவ நிறுவகத்திடம் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களை 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு உள்ளீர்த்தல் தொடர்பான தேசியக் கொள்கையை விதிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழக (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

தெற்காசிய தொழினுட்ப வியல் மற்றும் மருத்துவ நிறுவகத்தின் மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு உள்ளீர்த்தல்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''பல்கலைக்கழகம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் பதினைந்தாம் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டு மே மாதம் பதினைந்தாம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கிடையே (இதனகத்துப்பின்னர் ''தெதொமநி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தெற்காசிய

தொழினுட்பவியல் மற்றும் மருத்துவ நிறுவகத்திடம் பதிவுசெய்துள்ள மாணவர்களிடையேயிருந்து அடிப் படைத் தகைமைகளைப் பெற்றுள்ள அம்மாணவர்களை எம்பிபிஎஸ் பட்டத்தின் அளிப்புக்கு (கொபாப) இட்டுச் செல்கின்ற கற்கை நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்வதற்குப் பல்கலைக்கழகத்துக்கு உள்ளீர்ப்பதற்கும்;

(ஆ) எம்பிபிஎஸ் பட்டத்தின் அளிப்புக்கு (கொபாப) இட்டுச் செல்கின்ற கற்கை நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வோரும், பந்தி (அ) வின்கீழ் பல்கலைக் கழகத்துக்கு உள்ளீர்க்கப்பட்டோருமான மாணவர்களுக்கு எம்பிபிஎஸ் பட்டத்தை (கொபாப) அளிப்பதற்கும்;

(இ) அடிப்படைத் தகைமைகளை உடையவர்களும் நியமிக் கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் தெதொம நிறுவகத்தில் எம்பிபிஎஸ் பட்டத்தின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்ற கற்கை நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளவர்களுமான அம்மாணவர்களுக்கு, அது தொடர்பில் பல்கலைக்கழகத்தின் முகாமைச் சபை யினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது எம்பிபிஎஸ் பட்டத்தை (கொபாப) அளிப்பதற்கும்; அத்துடன்

(ஈ) பந்தி (இ) இல் குறித்துரைக்கப்பட்ட மாணவர்களுக்கு எந்த நிபந்தனைகளுக்கமைய எம்பிபிஎஸ் பட்டம் (கொபாப) அளிக்கப்படவேண்டுமோ அந்த நிபந்தனை களைத் தீர்மானிப்பதற்கு முகாமைச் சபையினால் பயன்படுத்தப்படவேண்டிய கட்டளைக்கற்கள் பற்றி முடிபுசெய்வதற்கும்.

3. இச்சட்டத்தில் – பொருள்கோடல்.

“அடிப்படைத் தகைமைகள்” என்பது, இலங்கையின் கல்வி அமைச்சினது பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயிரியலில் குறைந்தபட்சம் ‘S’ தர (சாதாரண) சித்திகள் அல்லது

இரசாயனவியல், கணிதம் மற்றும் உயிரியல் பாடங்களில் தோற்றியுள்ள மாணவர்கள் சமமான தகைமை உட்பட ஒரு சமமான வெளிநாட்டுத் தகைமையொன்று என்று பொருளாகும்;

"எம்பிபிஎஸ் பட்டம்" என்பது, மருத்துவ இளமாணி மற்றும் அறுவை மருத்துவ இளமாணிப் பட்டம் என்று பொருளாகும்.

‘

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.